

## நினைவேந்தல் படத்திறப்பு நாளில்

**ஸ்ரீதரனுக்கு இரங்கற்பா!** 06-07-2025

வற்றாத கல்வி தனை வளமாக பெற்ற மகன்,
கொற்றமாய் பணியிலே கொலோச்சி நின்றமகன்,
வற்றாத ஆசைகளை வகுத்துப் பிரித்து எடுத்து,
கற்றறிவைக் காட்சிப்படுத்தும் நிலைகொண்டு,

நற்றவ பணியெனவாய் நலம்கொள்ள பலருக்கும்;
முற்றமாய் தான்நின்று முழு வழி காட்டினானே!
பெற்ற பெருங்கருணை இறைதானும் கற்கவேண்டி
முற்றாத இளையவனை விரும்பி அழைத்தானோ?

பெற்றவரைப் பார்க்காமல், துணையவளைத் தனியிருத்தி
உற்றவனாம் இறையழைக்க ஒரு நொடியில் பறந்தானோ!
பெற்ற மகன் **ஸ்ரீதரனை**ப் பிரிந்திட்ட இந்நிலையில்,
பெற்றோர்தான் வெந்துதனிவாரோ வேதனையை யார்மீட்பர்?

மீட்பராம் இறையவனும் தீர்ப்பெழுதும் நாள்வரையில்
இளையவனும் தன் மண்ணில் நித்திரையில் ஆழட்டும்!
தனித்து தவித்து மனம் வருந்தும் பெற்றோருக்கு,
தகையவனாம் இறைவனே மனத் தெம்பை தான் அளிக்க,

வல்லவனாம் இறையவனை என் வழியில் வேண்டுகின்றேன்,
அன்பும் ஆசீர்வாதமும் யாவருக்கும் கிடைத்து
அமைதி நிலவட்டும்!

இறையை வேண்டி,
கு.ப. அசோகன்